# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி

## புலமைப்பரிசில் பரீட்சை- 2020

# ஒப்படைப்பத்திரம் (கணிதம் ) இலக்கம் 01

1. ஒரு பெட்டியில் 208 மாம்பழங்களும் இன்னொரு பெட்டியில் 309 கொய்யாப்பழங்களும் உள்ளன. இரண்டு பெட்டிகளிலும் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

2. ஒரு பூந்தோட்டத்தில் 450 மல்லிகை செடிகளும் 225 ரோசாசெடிகளும் உள்ளன. தோட்டத்தில் உள்ள பூச்செடிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

3. பண்ணையொன்றில் 345 ஆடுகளும் 248 கோழிகளும் உள்ளன. பண்ணையில் உள்ள மொத்த பிராணிகளின் எண்ணிக்கை யாது?

4. வாகன தரிப்பிடம் ஒன்றில் 275 கார்களும் 325 மோட்டார் சைக்கில்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது?

5. வீட்டுத்தோட்டம் ஒன்றில் 175 மிளகாய்ச் செடிகளும் 125 தக்காளிச்செடிகளும் பயிரிடப்பட்டுள்ளன. அங்கு காணப்படும் பயிர்ச் செடிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

6. பாடசாலையொன்றில் ஆண்பிள்ளைகள் 325 பேரும் பெண்பிள்ளைகள் 275 பேரும் உள்ளனர் அப்பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

- **பின்வரும் அட்டவணையானது இரண்டு நாட்களில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களை காட்டுகின்றது. இவ் அட்டவணையின் உதவியுடன் அடுத்து வரும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக .**

| பொருட்கள்(மூடைகள்) | மாதங்கள் | |
|---|---|---|
| | ஜனவரி | பெப்ரவரி |
| அரிசி | 1453 | 1405 |
| கோதுமை மா | 746 | 922 |
| சீனி | 2125 | 2320 |
| | | |


7. ஜனவரி மாதம் விற்கப்பட்ட அரிசி மூடைகளினதும் கோதுமைமா மூடைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?

8. இரு மாதங்களிலும் விற்கப்பட்ட அரிசி மூடைகளின் எண்ணிக்கை யாது?

9. ஜனவரி மாதம் விற்கப்பட்ட சீனி மூடைகளினதும் கோதுமை மா மூடைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?

10. இரு மாதங்களிலும் விற்பனை செய்யப்பட்ட அரிசி மூடைகளினதும் சீனி மூடைகளினதும் எண்ணிக்கை யாது?

11. பெப்ரவரி மாதத்தில் விற்கப்பட்ட அரிசி மூடைகளினதும்கோதுமை மா மூடைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?




**மேலே காட்டப்பட்டுள்ள எண் சுழலியை அடிப்படையாக வைத்து அடுத்து வரும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

12. எண் சுழலியை ஒரு மாணவன் மூன்று முறை சுழல விட்டான். சுழலி முறையே 1 , 2 , 3 என்ற இலக்கங்களில் நின்றது எனின் எண் சுழலி நின்ற மூன்று எண்களினதும் கூட்டுதொகை யாது?

13. எண் சுழலியில் உள்ள விரும்பிய மூன்று இலக்கங்களை கூட்டுக.

14. எண் சுழலியில் உள்ள பெரிய எண்ணையும் சிறிய எண்ணையும் கூட்டுக.

15. ஒரு மண்டபத்தில் ஒரு வரிசையில் 545 கதிரைகளும் ஏனைய இரண்டு வரிசைகளில் முறையே 450 , 165 என மூன்று வரிசையில் கதிரைகள் போடப்பட்டிருந்தன. மண்டபத்தில் காணப்படும் மொத்த கதிரைகளின் எண்ணிக்கை யாது?

**கண்காட்சி ஒன்றினை மூன்று நாட்கள் பார்வையிட வந்தவர்களின் விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதை அடிப்படையாக கொண்டு அடுத்து வரும் வினாக்களுக்கு விடை தருக .**

| கிழமைகள் | ஆண்கள் | பெண்கள் | சிறுவர்கள் |
|---|---|---|---|
| திங்கள் | 145 | 155 | 1050 |
| செவ்வாய் | 350 | 425 | 2025 |
| புதன் | 450 | 525 | 1400 |

16. திங்கட்கிழமை பார்வையிட்ட மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை யாது?

17. புதன் கிழமை கண்காட்சியை பார்வையிட்ட ஆண்களினதும் சிறுவர்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

18. செவ்வாய் கிழமை கண்காட்சியைப் பார்வையிட்ட மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை யாது ?

19. மொத்தமாக எத்தனை சிறுவர்கள் இக் கண்காட்சியினை பார்வையிட்டுள்ளனர்?

20. ஒரு தேயிலை தொழிற்சாலையில் முதல் நாள் 1550Kg தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாம் நாள் முதல் நாளைவிட 250kg கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டது. மொத்தமாக இரண்டு நாட்களும் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு யாது?

ஒப்படைப்பத்திரத்திற்கான விடைகள்

1. 517
2. 675
3. 593
4. 600
5. 300
6. 600
7. 2199
8. 2858
9. 2871
10. 7303
11. 2327
12. 4551
13. பொருத்தமான விடை
14. 4242
15. 1160
16. 1350
17. 1850
18. 2800
19. 4475
20. 3350 Kg

Education கல்வி අධ්‍යාපන